பதிவுகளில் அன்று: சங்க மாந்தரின் விருந்தோம்பல்!

Written by - முனைவர் கல்பனா சேக்கிழார் -
Wednesday, 05 September 2012 17:04 - Last Updated Wednesday, 05 September 2012 17:11

சங்கதமிழ் இலக்கியங்கள் காதல்,வீரம்,கொடையை மட்டுமன்றி இல்லறத்துக்குரிய அறங்களுள் ஒன்றாக விருந்தோம்பலையும் சிறப்பித்துக் கூறுகின்றன.விருந்தோம்பலில் தமிழரே பேர் பெற்றவர்கள். பழந்தமிழர் விருந்தோம்பலை வாழ்க்கையின் உயிர் நாடியாகக் கொண்டமை அக்கால நூல்களால் நன்கு தெரிகிறது. .பழந்தமிழ் நூல்களில் விருந்து மணமே பெரிதும் கமழ்ந்து கொண்டிருந்தது விருந்தோம்பலின் அருமையை அறிந்து வள்ளுவர் விருந்தோம்பலுக்கென்று தனியோர் அதிகாரத்தைப் படைத்துள்ளார் விருந்து' என்ற சொல் புதுமையைப் குறித்துப் பின்பு ஆகுபெயராய் விருந்தினரைக் குறித்து வழங்கலாயிற்று 'விருந்து தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' (பொருளதிகாரம்,
237) என்ற தொல்காப்பிய நூற்பா மூலம் அறியலாம். இல்லற நெறி பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே' இல்லறத்தின் தலையாய நெறியாகும். விருந்தோம்பல் இல்லாத வாழ்க்கை இல்வாழ்க்கை ஆகாது விருந்தோம்பலில் பெண் பெரும் பங்கு பெறுகிறாள் .ஆதலின் 'நல்வி
ருந்தோம்பலின் நட்டாள்'

எனத் திரிகடுகம் கூறும். தொல்காப்பியமும் மனைவிக்கு உரிய மாண்புகளாக விருந்தோம்பலையும் சுற்றம் ஓம்பலையும் சுட்டுகிறது
'விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'

(கற்பியல்,11) இல்லறத்தில் கணவன் மனைவியர் இருவரும் இணைந்து விருந்தோம்ப வேண்டும் என்பதை,இளங்கோவடிகளும்,கம்பரும் தம் காப்பியங்களில் புலப்படுத்தியுள்ளனர்.

கண்ணகி கோவலனை விட்டுப் பிரிந்த நிலையில்

அறவோர் களித்தலும் அந்தணர் ஓம்பலும்

1 / 5

பதிவுகளில் அன்று : சங்க மாந்தரின் விருந்தோம்பல் !

Written by - முனைவர் கல்பனா சேக்கிழார் -
Wednesday, 05 September 2012 17:04 - Last Updated Wednesday, 05 September 2012 17:11

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை (சிலம்பு)

எனக் கூறி வருந்துகின்றாள். இளங்கோவடிகள் 'தொல்லோர் சிறப்பின்' என்று விருந்துக்கு அடை கொடுத்துக் கூறியதால் தமிழரின் தொன்மையான பழக்க வழக்கம் என்பதும், முன்னோர் வகுத்த முறைப்படி விருந்தல் வேண்டும் என்பதும் புலனாம்.

இராமனைப் பிரிந்த சீதை விருந்தினர் வந்தால், அவர்களை ஓம்ப இயலா நிலையை எண்ணி இராமன் என்ன துன்பம் அடைவானோ எனக் கலக்கமுறுகிறாள்

'விருந்து கண்டபோது என்னுறுமோ என விம்மும்'
என்பது கம்பர் கூற்று விருந்திற்கான காரணம்

பழங்காலம் உணவு விடுதிகள் இல்லாத காலம். வெளியூர்க்குச் செல்வோர் பலநாளுக்கு வேண்டிய உணவினைக் கொண்டு செல்ல இயலாது. .செல்வர்களும், வணிகர்களும் தேர்களிலும், மற்ற ஊர்திகளிலும் செல்லும் போது உணவிற்குத் தேவையானப் பொருள்களைக் கொண்டு செல்ல முடிந்தது. மற்றவர்கள் உணவையோ, உணவுப் பொருள்களையோ கொண்டு செல்ல முடியாத நிலையிருந்தது. அதனால் உணவின்றி வருந்துவோருக்கு உணவளித்தல் இன்றியமையாத அறமாகப் போற்றப்பெற்றது இக்காலத்தில் உணவு விடுதிகள் பெருகியுள்ளன. எப்பொருள் எங்கு வேண்டுமென்றாலும் பெறலாம். பல நாள்களுக்கு வைத்துக் கொள்ளும்படியான பல உணவு வகைகள் கிடைக்கின்றன. அதனால் இப்பொழுது விருந்தோம்பல் என்பது செல்வச் செழிப்பைக் காட்டுவதற்காகவும் பயனை எதிர்பார்த்துச் செய்வதற்காவும் மேற்கொள்ளப்பெறுகிறது. இக்காலத்தில் புதியவர் யாரையும் நம்பும்படியான சூழ்நிலையில்லை. 'எந்த புற்றில் எந்த பாம்போ' என்ற நிலைதான் இன்று காணப்பெறுகின்றது. அதனால் விருந்தோம்பவும் அஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

.

விருந்தோம்பும் முறை

விருந்தை விருந்தினர் மனம் மகிழும்படி ஓம்புதலே சிறப்பு. மலர்கள் மென்மையால் வாடும், அனிச்சம் மிக மென்மையானது ஆதலால் முகர்ந்தாலே அது வாடிவிடும். விருந்தினர் மிக மென்மையானவர்கள், சேய்மைக்கண் முகம் திரிந்து நோக்கினாலே வாடிவிடுவர்,

2 / 5

பதிவுகளில் அன்று : சங்க மாந்தரின் விருந்தோம்பல் !

Written by - முனைவர் கல்பனா சேக்கிழார் -
Wednesday, 05 September 2012 17:04 - Last Updated Wednesday, 05 September 2012 17:11

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து(குறள்,90)

என்று குறள் கூறும்.இக்குறளுக்குப் பரிமேலழகர்,விருந்தினரைச் சேய்மைக்கண் கண்டுழி இன்முகமும் அது பற்றி நண்ணிய வழி இன்சொல்லும்,அவை பற்றி உடன்பட்ட வழி நன்றாற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக் கண்ணே வாடி நீங்குதலின் தீண்டிய வழியல்லது வாடாத அனிச்சப் பூவினும் விருந்தினர் மெல்லியர் என்று விளக்கம் தருவர்.இதனால் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென அறியலாம்.

விருந்தினர் ஓம்பும் முறையைப் பொருநராற்றுப்படை விரித்துக் கூறும். விருந்தினரிடம் நண்பனைப்போல உறவு கொண்டு,இனிய சொற்களைக் கூறி,கண்ணில் காணும்படி தனக்கு நெருக்கமாக இருக்கச் செய்து,கன்று ஈன்ற பசு கன்றிடம் காட்டும் அன்பு போல விருந்தினரிடம் அன்பு காட்டி எலும்பே குளிரும்படியான அன்பால் நெகிழச் செய்ய வேண்டும் எனப் புகலும்.

கேளிர்போல கேள் கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறி

கண்ணில் காண நண்ணுவழி இரீஇ
பருகு அன்ன அருகா நோக்கமொடு(பொருநராற்றுப்படை,74-78)

பல வகையான உணவினை விண்மீன்கள் போல கிண்ணத்தில் பரப்பி விருந்தினரை அன்போடு நோக்கி ,அவர்கள் விரும்பியதைக் குறிப்பறிந்து கொடுத்து ஓம்ப வேண்டும் என்பதைப் பெருபாணாற்றுப்படை வழி அறியலாம்

மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனா விருப்பின் தானின்று ஊட்டி (477-479)

தானின்றுட்டி' என்ற அடியை நோக்குழி, விருந்து படைப்பவரே அருகில் இருந்து,

3 / 5

விரந்தினர் விரம்பம் உணவினை வழங்க வணேடம் என்பதகை காணலாம்

அதியமான் ஓரநாள் சனென்றாலம், இரநாள் சனென்றாலம்,பலநாள் பலரோட சனென்றாலம், மதல் நாள் பானென்றே இன்மகத்தடன் வரவறேன்ற விரந்தாேம்பினான் என்பதை ஔவையார் பாடல் ம[illegible]லம் அறியலாம்

இக் காலத்தில் மகளிர் விரந்தினரை வரவறேன்ற ஓம்பதலபை பாவநேர்தர் பாரதிதாசனம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]-[illegible]
[illegible]'([illegible])
[illegible]

மரந்தே யாயினம் விரந்தோட உண'' என்ற ஔவையின் வாக்கக்கறேப வாழ்ந்த இனம் தமிழினம். விழப்பண் படாத நாறலலெல்லாம் வீ ழ்நாள'' என்ற மறவன் கரதவத பாேல விரந்தினர் வாரா நாளலெல்லாம் வீ ண்நாளாகப் பண்டயைாேர் கரதினர் கிடதை்தற்கரிய அமிழ்தம் கிடதை்தாலம் தான் மட்டம் உண்ணாமல் விரந்தினர்களோட பகப்ப உண்டார்கள் என்பதை

'[illegible]
[illegible]
[illegible]'(182)
[illegible]

அதியமான் கிடதை்தற்கரிய நலெ்லிக் கனி கிடதை்தம் தான் உண்ட நடித வாழாமல் ஔவகைக் ஈந்தத ,விரந்தாேம்பலின் சிறப்பினகை காட்டவதாகம்.

ஆயர்கள் மாட மயேக்கப் பறப்படம்பாேத உணவினை ம[illegible]ங்கில் கழாயில் இட்ட, மாட்டின் கழத்தில் கட்டிக்காொண்ட காட்ட வழியே சலெ்வர் அங்க யாரம் பசியாேட வந்தால் தாம் மட்டம் உண்பதற்க வதை்திரக்கம் உணவினை அவர்களக்கப் பகத்தக் காொடப்பர் என்ற அறிகிறாேம்

பதிவுகளில் அன்று : சங்க மாந்தரின் விருந்தோம்பல் !

Written by - முனைவர் கல்பனா சேக்கிழார் -
Wednesday, 05 September 2012 17:04 - Last Updated Wednesday, 05 September 2012 17:11

'கோவலர் மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவியடை தீரத் தேச்சிலைப் பகுக்கும்
புல்லிநன்னாடு '(அகம் 311,9-12)
விருந்தினர் இரவில் காலம் கழித்து வரினும் மனம் மகிழ்ந்து விருந்தோம்பினர்

(நற்றிணை,142)இரவில் வாயில் கதவை அடைக்கும் முன் விருந்தினர் உளரா எனப் பார்த்து இருப்பின் அழைத்து வந்து உணவளிப்பர்

.(குறுந்தொகை,205,12-14)விருந்தினருக்கு விடைகொடுத்து அனுப்பும்போது குதிரை பூட்டிய தேரினைக் கொடுத்து ,ஏழடி பின் தொடர்ந்து சென்று வழியனுப்புதல் பண்டைய வழக்கமாகும்

.(பொருநராற்றுப்படை,165,166)விருந்தோம்பலில் விருப்பம் கொண்டு அதற்காகவே பொருளிட்டச் சென்றுள்ளனர் (அகம்,205,12-14)

பொருளையெல்லாம் இழந்து வறுமையுற்ற காலத்தும், விருந்தினரைச் சிறப்பாக ஓம்புதலைச் சங்க மக்கள் தங்கள் கடமையாகக் கொண்டிருந்தனர்

.வறுமையுற்று விருந்தோம்பா நிலையிலும் ஒருவன் முதல் நாள் தன் பழைய வாளை விற்றும் ,அடுத்த நாள் யாழை அடகு வைத்தும் விருந்தோம்பினான் .(புறம்,316,5,7) வரகும் தினையும் இரவலர்க்கு ஈந்து தீர்ந்தன வேறு வகையில் பொருள் பெற வழியில்லை ,அந்நிலையில் விதைக்கு இருந்த தினையை உரலில் இட்டுக் குத்தி மகளிர் விருந்தோம்பினர் .(புறம்,333) அதியமான் வறுமையுற்ற காலத்தும் விருந்தோம்பினான் என்பதை புறநானூறு கூறுகிறது(103)(95). இவ்வாறு சங்க இலக்கியங்கள் விருந்தோம்பும் முறையைப் பரக்கப் பேசுகிறது.

kalpanasekkizhar@gmail.com

மூலம் : பதிவுகள் தை 2009 இதழ் 109

5 / 5